॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ஹேமலம்பஸம்வத்ஸரத்தின் உபாகர்மநிர்ணயம்

"उपाकर्म स्वगृह्योक्ते काले (अनुष्ठेयम्)" (वैद्यनाथदीक्षितीये अत्रिः पृ०.३२ प०.११)

(உபாகர்மாவை அவரவர்ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட காலத்தில் அநுஷ்டிக்க வேண்டும்)

என்று கூறப்பட்டுள்ளதால் அவரவர் தங்கள் க்ருஹ்யஸூத்ரத்தில் சொல்லப்பட்ட காலத்தில் உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டும். ஸ்வக்ருஹ்யஸூத்ரத்தில் சொல்லப்பட்ட காலத்தில் க்ரஹணம் முதலிய தோஷங்கள் ஸம்பவித்தால் ஸ்வக்ருஹ்யஸூத்ரத்தில் அனுமதித்த வேறு காலத்திலோ, அல்லது ஸ்ம்ருத்யாதிகளில் கூறப்பட்ட மற்ற காலத்திலோ அனுஷ்டிக்க வேண்டும். இவ்வருடம் ஶ்ராவணபௌர்ணமியில் (7-8-2017 அன்று) **சந்த்ரக்ரஹணம்** வருகிறது. க்ரஹணதினத்தில் உபாகர்மாவை அனுஷ்டிக்கக்கூடாதென்று கீழ்க்கானும் வசனங்கள் கூறுகின்றன.

उपरागे रवीन्द्वोस्तु श्रावणन्तु न कारयेत् । यदि वा कुरुते मोहात्सह शिश्यैर्विनश्यति ॥ (कालप्रकाशिका ९.२६)

(ஸூர்யசந்த்ரக்ரஹணதினத்தில் உபாகர்மாவை அநுஷ்டிக்கக்கூடாது. அன்று அநுஷ்டித்தால் ஶிஷ்யர்களுடன் அந்த ஆசார்யனும் அழிவான்.) (காலப்ரகாஶிகை 9.26)

"ग्रहयोगो गुरुं हन्ति सङ्क्रान्तिः शिष्यघातिनी" (हेमाद्रिकृतचतुर्वर्गचिन्तामणौ परिशेषखण्डे कालनिर्णये पृ०.४०१)

(உபாகர்மதினத்தன்று க்ரஹணத்தின் சேர்க்கை குருவையும், ஸங்க்ராந்தியின் சேர்க்கை ஶிஷ்யர்களையும் அழித்துவிடும்)

(ஸ்ரீஹேமாத்ரிக்ருதசதுர்வர்கசிந்தாமனியில் பரிஶேஷகண்டத்தின் காலநிர்ணயபாகத்தில் பக்கம் 401)

राहूपरागे सङ्क्रान्तौ मलमासे विषे तथा। उपप्लवे च राष्ट्रस्य नैवोपाकरणं स्मृतम् ॥ (कालप्रकाशिका ९.३३)

(ஸூர்யசந்த்ரக்ரஹணதினத்திலோ, மாஸப்பிறப்பன்றோ, அதிகமாஸத்திலோ, ராஜ்யம் எதிரியால் ஆக்ரமிக்கப்பட்டாலோ உபாகர்மாவை அன்று அநுஷ்டிக்கக்கூடாது. (காலப்ரகாஶிகை 9.33)

மேற்கூறிய க்ரஹணநிஷேதம் ராத்ரிமத்யத்திலோ, அதற்க்கு கீழோ க்ரஹணம் வந்தால் மட்டுமே என்று கூறப்படுகிறது

"अर्धरात्रादधस्ताचेत्सङ्क्रात्यां ग्रहणेऽपि वा । न कर्त्तव्यमुपाकर्म परतश्चेन्न दोषभाक्" ॥

(वैद्यनाथदीक्षितीये वर्णाश्रमधर्मकाण्डे पृ०.३३ प०.२७, श्राद्धकाण्डे पृ.७०४ प०.१८)

(ராத்ரிமத்யத்திலோ, அதற்க்கு கீழோ க்ரஹணமோ ஸங்க்ராந்தியோ (மாஸப்பிறப்போ) வந்தால் அன்று உபாகர்மாவை அநுஷ்டிக்கக்கூடாது. ராத்ரியின் முதல் பாதிக்கு மேல் வந்தால் தோஷமில்லை.)

சிலர் கீழ்க்கனும் வசனத்தால் உபாகர்மாவிற்க்கு க்ரஹணதோஷமில்லை என்று கூறுகின்றனர்.

नित्ये नैमित्तिके जप्ये होमयज्ञक्रियादिषु । उपाकर्मणि चोत्सर्गे ग्रहवेधो न विद्यते ॥

(स्मृतिकौस्तुभे पृ० १५६, हेमाद्रिकृतचतुर्वर्गचिन्तामणौ परिशेषखण्डे कालनिर्णये पृ०.४००)

(நித்யகர்மாக்களுக்கும், நைமித்திககர்மாக்களுக்கும், ஜபங்களுக்கும், ஹோமம் யக்ஞம் முதலியவைகளுக்கும், உபாகர்மாவிற்க்கும், உத்ஸர்ஜனத்திற்க்கும் கரஹணதோஷமில்லை)

இந்த வசனம் க்ரஹணவேததோஷமில்லை என்று கூறுகிறதே தவிற க்ரஹணதோஷமில்லை என்று கூறவில்லை. க்ரஹணவேதத்தைக் கீழ்க்கனும் வசனங்கள் கூறுகின்றன.

त्रयोदश्यादितो वर्ज्यं दिनानां नवकं ध्रुवम् । माङ्गल्येषु समस्तेषु ग्रहणे चन्द्रसूर्ययोः ॥

(स्मृतिकौस्तुभे पृ० १५६, हेमाद्रिकृतचतुर्वर्गचिन्तामणौ परिशेषखण्डे कालनिर्णये पृ०.४००)

(சந்த்ரஸூர்யக்ரஹணங்களில் த்ரயோதஶி முதல் 9 நாட்கள் க்ரஹணவேதமாகும். இந்த 9 நாட்களிலும் எல்லா மங்களகார்யங்களையும் தவிர்க்க வேண்டும்)

வேதத்தின் வேறொரு ப்ரகாரம்

द्वादश्यादितृतीयान्तो वेध इन्दुग्रहे स्मृतः। एकादश्यादितः सौरे चतुर्थ्यन्तं प्रकीर्तितः॥

खण्डग्रहे तयोः प्रोक्तमुभयत्र दिनद्वयम् ॥

(स्मृतिकौस्तुभे पृ० १५६, हेमाद्रिकृतचतुर्वर्गचिन्तामणौ परिशेषखण्डे कालनिर्णये पृ.४००)

**(பூர்ணசந்த்ரக்ரஹணத்தில் த்வாதஶீயிலிருந்து த்ருதீயை வரை 7 நாட்களும், பூர்ணஸூர்யக்ரஹணத்தில் ஏகாதஶீயிலிருந்து சதுர்த்தீ வரை 9 நாட்களும், கண்டசந்த்ரஸூர்யக்ரஹணத்தில் (பார்ஶ்வக்ரஹணத்தில்) சதுர்த்தீயிலிருந்து ப்ரதமை வரை 3 நாட்களும் வேதமாகும்.)**

மேல்கூறிய வசனங்களால் சொல்லப்பட்ட க்ரஹணவேததோஷமானது உபாகர்மாவிற்க்கு கிடையாது என்பதையே उपाकर्मणि चोत्सर्गे ग्रहवेधो न विद्यते என்ற வசனம் கூறுகிறதே தவிற உபாகர்மாவிற்க்கு க்ரஹணதோஷமே இல்லை என்று இல்லை. வேறொரு வசனமும் அவ்வாறே கூறுகிறது.

ग्रहसङ्क्रमयोः शूलं श्रावणस्य न विद्यते ॥ (कालप्रकाशिका ९.११)

(க்ரஹணத்தின் ஶூலை உபாகர்மாவிற்க்கு இல்லை)

சிலர்

पौर्णमास्यास्तु नित्यत्त्वादापस्तम्बस्य शासनात् ॥ मुक्त्वा भाद्रपदाषाढौ श्रावण्यामेव कारयेत् ॥

(वैद्यनाथदीक्षितीये वर्णाश्रमधर्मकाण्डे पृ० ३३ प०३३, कालप्रकाशिका ९.१३)

**(ஆஷாடபௌர்ணமியையும், பாத்ரபதபௌர்ணமியையும் தவிர்த்து ஶ்ராவண்பௌர்ணமியிலேயே துஷ்டமானாலும் ஆபஸ்தம்பர் கூறியுள்ளதால் உபாகர்மாவை அநுஷ்டிக்கவேண்டும்.)**

என்று கூறப்படுவதால் ஶ்ராவணபௌர்ணமியிலேயே துஷ்டதினமானாலும் உபாகர்மாவை அனுஷ்டிக்கவேண்டும் என்று கூறுகின்றனர். அதுவும் சரியல்ல. ஏனெனில் இந்தவசனம் மூன்று காலங்களும் (ஶ்ராவணமௌர்ணமீ, பாத்ரபதபௌர்ணமீ, ஆஷாடபௌர்ணமீ) துஷ்டமானால் ஶ்ராவணமௌர்ணமியில் உபாகர்மாவை அனுஷ்டிக்கவேண்டும் என்றே கூறுகிறது. தீக்ஷிதீயத்திலும் அவ்வாறே

कालत्रयेऽपि दोषे तु श्रावण्यामेव कारयेत् । (वैद्यनाथदीक्षितीये वर्णाश्रमधर्मकाण्डे पृ० ३३ प०३३)

**(மூன்று காலங்களும் (ஶ்ராவணமௌர்ணமீ, பாத்ரபதபௌர்ணமீ, ஆஷாடபௌர்ணமீ) துஷ்டமானால் ஶ்ராவணமௌர்ணமியில் உபாகர்மாவை அநுஷ்டிக்கவேண்டும்)**

மேற்கூறிய வசனங்களின் அடிப்படையில் நிச்சயமாக க்ரஹணயுக்ததினத்தில் உபாகர்மாவை அனுஷ்டிக்கக்கூடாதென்பது மிகத்தெளிவாகியுள்ளது. இவ்வருடம் சந்த்ரக்ரஹணம் ஆடி 22ம் (7-8-2017) தேதியன்று இரவு (முதல் பாதியில்) 10:52 PM முதல் (8-8-2017) 12:48 AM வரை உள்ளது. இவ்வாறிருக்க மேற்க்கூறிய வசனங்களினால் அன்று (7-8-2017 அன்று) உபாகர்மாவை அனுஷ்டிக்கலாகாது. ஆகையால் அந்த்தந்த ஸூத்ரகாரர்களின் உபாகர்ம நிர்ணயத்தை பார்ப்போம்.

# ரிக்வேதிகளின் உபாகர்ம நிர்ணயம்

"अथातोऽध्यायोपाकरणम् । ओषधीनां प्रादुर्भावे श्रवणेन श्रावणस्य । पञ्चम्यां हस्तेन वा" (आ.गृ ३.५.१-३) என்ற ஆஶ்வலாயனக்ருஹ்யஸூத்ரத்தில் ஶ்ராவணமாஸத்தின் ஶ்ரவணநக்ஷத்ரம், ஹஸ்தநக்ஷத்ரத்தோடு சேர்ந்த பஞ்சமீ அல்லது ஶ்ராவணஶுக்தபஞ்சமீ என்று மூன்று காலங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஶ்ராவணமாஸத்தில் ஶ்ரவண நக்ஷத்ரத்துடன் கூடிய தினத்தில் (7-8-2017 அன்று) ராத்ரியின் முன்பாதியில் சந்த்ரக்ரஹணம் வருகிறது.|

यद्यर्धरात्रादर्वाक्तु ग्रहः सङ्क्रम एव वा । नोपकर्म तदा कुर्यात् श्रावण्यां श्रवणेऽपि वा ॥

(निर्णयसिन्धौ पृ०.९०)

**(ராத்ரிமத்யத்திலோ, அதற்க்கு கீழோ க்ரஹணமோ ஸங்க்ராந்தியோ (மாஸப்பிறப்போ) வந்தால் ஶ்ராவணஶ்ரவணத்தில் உபாகர்மாவை அநுஷ்டிக்கக்கூடாது.)**

என்ற வசனத்தின்படியும், முன் சொல்லப்பட்ட வசனங்களின் படியும் 7-8-2017 அன்று உபாகர்மாவை அனுஷ்டிக்கக்கூடாது. ஆகையால் ஆஶ்வலாயனக்ருஹ்யஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ஹஸ்தநக்ஷத்ரத்துடன் கூடிய ஶ்ராவணஶுக்லபஞ்சமியில் ஆடி 12ம் தேதியில் **(28-7-2017 அன்று)** அனுஷ்டிக்க வேண்டும்.

# ஆபஸ்தம்பஸூத்ரானுஸாரிகளின் உபாகர்ம நிர்ணயம்

ஆபஸ்தம்பக்ருஹ்யஸூத்ரத்தில் உபாகர்மாவின் காலத்தைக்குறித்து ஸூத்ரகாரர் எதுவும் கூறவில்லை. சிலர் ஆபஸ்தம்பக்ருஹ்யஸூத்ரத்தில் 4வது மற்றும் 5வது படலத்தின் நடுவில் ஸத்யாஷாடபாரத்வாஜக்ருஹ்யஸூத்ரத்தின் உபாகர்மபடலத்தை உட்புகுத்தி "உபாகர்மோத்ஸர்ஜனபடலம்" என்ற ஒரு படலம் உள்ளது என்றும் அங்கு காலம் சொல்லப்பட்டுள்ளதாகவும் கருதுகின்றனர். அந்த படலத்திற்க்கு ஸ்ரீஹரதத்தரால் இயற்றப்பட்ட அனாகுலா வ்யாக்யானமும் உள்ளது. ஆனால் கபர்திபாஷ்யமோ, ஸுதர்ஶனாசார்யக்ருத தாத்பர்யதர்ஶனமோ இல்லை. தாத்பர்யதர்ஶனகாரர் இதை இடைச்சொருகல் என்று கண்டிக்கவும் செய்கிறார். ஆகையால் ஶிஷ்டர்கள் அதை ஏற்பதில்லை. ஆபஸ்தம்பதர்மஸூத்ரத்தில்

**श्रावण्यां पौर्णमास्यामध्यायमुपाकृत्य** (आप० ध० ३.१)

***(ஶ்ராவணபௌர்ணமியில் உபாகர்மாவை செய்து)***

என்று ஶ்ராவணபௌர்ணமியை மட்டுமே கூறியுளார். ஆனாலும் வைத்யனாததீக்ஷிதீயத்தில்

**प्रोष्ठपद्यामुपाकुर्याच्छ्रावणं दूषितं यदि ॥** (वैद्यनाथदीक्षितीये वर्णाश्रमधर्मकाण्डे पृ० ३३ प०३०)

***(ஶ்ராவணபௌர்ணமீ (க்ரஹனம் முதலிய) தோஷங்களுடன் கூடியதாக இருந்தால் பாத்ரபதபௌர்ணமியில் (ப்ரௌஷ்டபதியில்) உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டும்)***

என்று கூறப்பட்டுள்ளதால் ஆபஸ்தம்பஸூத்ரானுஸாரிகள் பாத்ரபதபௌர்ணமியில் (6-9-2017 அன்று) உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டும்.

# போதாயனஸூத்ரானுஸாரிகளின் உபாகர்ம நிர்ணயம்

**हुतानुकृतिरुपाकर्म । श्रावण्यां पौर्णमास्यां क्रियेतापि वा आषाढ्याम्** (बो० गृ० ३.१.१,२)

***(உபாகர்மாவை ஶ்ராவணபௌர்ணமியிலோ ஆஷாடபௌர்ணமியிலோ அனுஷ்டிக்க வேண்டும்)***

என்று போதாயனக்ருஹ்யஸூத்ரத்தில் கூறப்பட்டுள்ளதால், ஶ்ராவணபௌர்ணமியில் க்ரஹணதோஷமுள்ளதால் ஆஷாடபௌர்ணமியில் (ஆனி மீ 28ம் தேதி 9-7-2017 அன்று) உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டும்.

# காத்யாயன (பாரஸ்கர) க்ருஹ்யஸூத்ரானுஸாரிகளின் (சுக்ல யஜுர்வேதிகளின்) உபாகர்ம நிர்ணயம்

**अथातोऽध्यायोपाकर्म । ओषधीनां प्रादुर्भावे श्रवणेन श्रावण्यां पौर्णमास्यां श्रावणस्य पञ्चमीं हस्तेन वा**

(पारस्करगृह्यसूत्रे २.१०.१,२)

என்ற பாரஸ்கரக்ருஹ்யஸூத்ரத்தில் ஶ்ராவணபௌர்ணமீ, ஶ்ராவணஹஸ்தயுக்தஶுத்தபஞ்சமீ, ஶ்ராவணஶுத்தபஞ்சமீ என்று மூன்று காலங்கள் கூறப்பட்டுள்ளன. ஶ்ராவணபௌர்ணமியில் க்ரஹணமேற்படுவதால், ஶ்ராவணஹஸ்தயுக்தஶுத்தபஞ்சமியில் ஆடி 12ம் தேதி 28-7-2017 அன்று சுக்ல யஜுர்வேதிகள் உபாகர்மாவை அனுஷ்டிக்க வேண்டும். அவாறே கீழ்கானும் வசனங்கள் கூறுகின்றண.

सङ्क्रान्तिर्ग्रहणं वाऽपि पौर्णमास्यां यदा भवेत् । उपाकृतिस्तु पञ्चम्यां कार्या वाजसनेयिभिः ॥
यदि स्याच्छ्रावणं पर्व ग्रहसङ्क्रान्तिदूषितम् । स्यादुपाकरणं शुक्लपञ्चम्यां वा तदिष्यते ॥
सङ्क्रान्तिर्ग्रहणं वाऽपि यदि पर्वणि जायते । तन्मासे हस्तयुक्तायां पञ्चम्यां वा तदिष्यते ॥